தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 7, திருவள்ளுவர் ஆண்டு–2053

2022 மார்ச் 21, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. கோ. ஜானகிராமன், திரு. என். கருப்பண்ண உடையார், திரு. பெ. மாரப்பன், திரு. மு.மு.அ. ரசாக், திரு. கா. வேழவேந்தன் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கோ. ஜானகிராமன் அவர்கள் 8–1–2022 அன்றும், திரு. என். கருப்பண்ண உடையார் அவர்கள் 10–1–2022 அன்றும், திரு. பெ. மாரப்பன் அவர்கள் 18–1–2022 அன்றும், திரு. மு.மு.அ. ரசாக் அவர்கள் 22–1–2022 அன்றும் மற்றும் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் 26–1–2022 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கோ. ஜானகிராமன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் மேல்மலையனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

திரு. என். கருப்பண்ண உடையார் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் பாபநாசம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பெ. மாரப்பன் அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் காங்கேயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. மு.மு.அ. ரசாக் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் கடையநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. கா. வேழவேந்தன் அவர்கள் 1967–1971 மற்றும் 1971–1976 ஆகிய ஆண்டுகளில் கும்மிடிப்பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1969–1970 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

பிரபல பின்னணி பாடகி செல்வி லதா மங்கேஷ்கர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். இந்தியாவின் இசைக் குயில், பிரபல பின்னணி பாடகி செல்வி லதா மங்கேஷ்கர் அவர்கள் 6–2–2022 அன்று உடல் நலக் குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணா துயரமும் கொள்கிறது.